உ

சிவமயம்.

எட்டயபுரம்

ஸ்ரீமாந்.

# க. ஆண்டியப்பபிள்ளை

அவர்கள் மீது

# பிள்ளைத்தமிழும்
# உதாரசோதனைமஞ்சரியும்
# தனிக்கவிகளும்

எட்டயபுரம் சமஸ்தான வித்துவான்

ஸ்ரீமத்.

க. மீனாக்ஷிசுந்தரக்கவிராயரவர்களால்

இயற்றப்பெற்று


மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப்பெற்றன.

1909.

உ (91|6)

குமரன் றுணை.

## க. ஆண்டியப்பபிள்ளையவர்கள்,

# பிள்ளைத்தமிழ்.

### விநாயகர் துதி.

கார்கொண்டநீள்பனைக்கையடியில்வெண்கோடுகதுவிவருகின்றகாட்சி, கருமுகிறவழ்ந்துவருமிருசிகரமத்தகங்காணுமலையானதலைசேர்; வார்கொண்டவாயெனுமுழைக்கணூர்வண்பிறைதன்வாய்க்கடையெடுத்துனுழைய, மாட்டாதராகுநிலைகாட்டுசிறுதாட்டுணைமதப்போதகத்தைநினைவாம்; ஏர்கொண்டமாதர்தமிணைப்பெருமுலைக்கெதிரிடுந்திறனுணர்ந்துசீறி, யீர்ங்கழுவிடப்பட்டதென்னவுமதான்றுதானிணையாகவிண்ணைநோக்கிச்; சீர்கொண்டதவசுபுரிகின்றதெனவுங்கனகதிண்கலசமுடிகடோறுந், திகழ்மனைவிளங்கிளசையாண்டியப்பேந்திரன்செந்தமிழ்தழைத்துவரவே.

## நூல்

# காப்புப்பருவம்.

### திருமால்துதி.

கங்கைசேர்செங்கமலமாதுதனிறந்தனிற்காத்தறவும்
வேறுபலவங், கனையரைமணந்தவள்புலந்திடல்வணங்கிநின்க
னகமுலையிபமுமவர்தங்; கொங்கையிபமும்பொரச்செய்துபா
ர்த்தேதென்னக்கூறுபுதிருத்தியுலகைக், கூர்ந்துநனிபூத்திடப்பு
த்திரரையீந்துகாக்குங்கருங்கொண்டல்காக்க; சிங்கநிகர்செக
வீரராமக்குமாரெட்டசீமான்மனத்துமகிழுந், திவ்வியமதிமந்
திரியைமிகுபுனிதகங்கைகுலதிலகனைவிளங்குதருவை; மங்
களபுயாசலனையிங்கிதகுணாகரனைவண்குவனை மார்பமணியை,
வரம்வேண்டினர்க்குதவிபுரியாண்டியப்பனென வருகாண்டி
பப்பதியையே. (க)

திறம்=மார்பு. அங்கனையர்=பெண்கள். இபம்=யானை.

### வேறு.

### சிவபெருமான் பார்வதி விநாயகர் முருகக்கடவுள்துதி.

மருவிலங்கியவரியகொன்றையைமதியைநஞ்சுறவாய்ந்
திடப்பாந்தளை, மருவுகங்கையைநறியதும்பையைவளர்பெ
ருஞ்சடையிண்டவைத்தேந்துகை, மழுவொடுங்கலையணிபுயி
ங்கிதவரதநுங்கபதாம்புயத்தேந்தலை, மருங்கிநன்றுளமுருகி
யன்றொருகரையிருந்தழுதேங்குநற்றோன்றலின்; இருதயக்

குளிருறநயக்கமுதுதவுமம்பிகையாங்கிரிக்காந்தையை, இணை
யறுங்குடவயிறுதங்கியவிருகுறும்பதமோங்குரத்தாம்பலை,யி
னியதொண்டர்தமனநினைந்தவை யெவையுமின்புறவேண்டுமெ
ட்டாம்படி, யெழிலொடுந்தருகுமரனம்பனையினிதிறைஞ்சியு
நாந்துதிப்பாந்தினம்; உருவிளங்கியகொடிகளும்பரிலுறநினை
ந்துவிஞ்ஞார்ந்திடத்தாம்பரி, யுவைநடந்திடவடிவழங்கிடுமிள
சையம்பதியார்ந்துவப்பாந்திற, முரிமைகொண்டவனயமிகுந்
தமிழியலனந்தமுமோர்ந்துறத்தேர்ந்தவ, னொருகணந்தனில்
யமகமுந்திரிபுகளும்விண்டுசொல்யாந்தருக்காம்பொருள்;அரு
ளொடுந்தருநிகரவுந்தருமதிபனஸ்பிடைவாஞ்சையுற் றேன்
பொரு, மரசனுந்தியபெரியவெஞ்சமராழியவென்றிடுவோன்
றுதித்தோன்றனை, யனுதினங்களியொடுமகிழ்ந்தருளதுலசுந்
தரவாண்டியப்பேந்திர, வபயனென்றிடுசுகுணகந்தனைநனிபு
ரந்திடவேண்டிமிக்கோங்கவே. (௨)

## பிரமதேவன் தேவேந்திரன் இலக்குமி சரசுபதி சத்தமாதர் முப்பத்துமுக்கோடிதேவர்துதி.

தோட்டுக்கமலவீட்டயனுந்துதியோங்கமராபதியோனுந்
துலக்குங்கருணையிலக்குமியுஞ்சொல்லாடமிழ்க்குவல்லாளு
மோட்டுமெயிடற்றீட்டுவளுமுன்னியருளேழ்கன்னியரு
முப்பதொடுமுக்கோடியெனுமுதியவிமையவரும்புரக்க

நாட்டிற்கனகம்பெயும்புயலைநவிலும்புலவரிருநிதியை
நலஞ்சேர்கருத்தமுத்தீன்றநமதுகுலசிந்தாமணியை [றை
யிட்டுங்கருணைப்பெருங்கடலையினியதருவைக்குணக்குன்
யிளசைமதிமந்திரியைவரமிசையாண்டியப்பமேநனுவையே. ()

முதலாவது காப்புப்பருவம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௪.

---

## உ-வது செங்கீரைப்பருவம்.

---

நினதுமுகமதியினைக்கண்டகைப்பங்கயநிகழ்ந்திதுவலி ந்துதழுவ,நேர்ந்தருகெழுந்துவந்தநுங்கபதிப்பரிதிநேசமனமு ன்னியோநம்; மனநிலைமைகண்டோவலாதினிக்காணவோ மழுவுடையசோதிமுடிமேல், வதிமகிமையாலஞ்சியோதடைபு ரிந்திடவும்வந்ததிலையாதுபுரிவோம்; எனநணிநினைந்தஃதினை திருறுமற்றிருமியேங்கிநிலமீதுகுப்புற், றிருந்தனவெனப்பா ணிபூண்றிமுகமாடவொரெழிற்பதமிதித்திருந்து; தினகர னுமோடிவலம்வருமிளசையூரனேசெங்கீரையாடியருளே, தி கழ்பாண்டியற்குநிகர் புகழாண்டியப்பமுகில் செங்கீரையாடி யருளே. (க)

ஒருமானையேந்திவருபெருமானெடுடுபுநிறுமையவடனக் குழேவட்டகை, யொடுநினதுமேனிசெம்பாதிதந்ததுமன்றி.

யோவாதவட்குவெருவி; மருமாலைவேணிகொண்டென்னையு
மொழித்துநிதம்வைத்தனையிதென்னவவள்பான், மருவுபோ
வென்றுசினமுறுபோதெனுசைமடமங்கையேநின்னையென்
னே;டிருமாநிலத்தவளுமேசுமந்திடவுமேலேற்றமுறுபவளுநீ
யே, யென்பதுதெரிந்திடவுமன்றேபுரிந்ததவிரண்டுமென
வூடல்போய்மு; திருமாதரத்தினணைகங்கைகுலசேகராசெங்
கீரையாடியருளே, திகழ்பாண்டியற்குநிகர்புகழாண்டியப்
பமுகில்செங்கீரையாடியருளே. (உ)

ஆவலொடும்பலபண்பயிறும்பிகளங்கோலஞ்சார்
வங்கைவிலுங்கொடுவந்தமதன்றனையங்கோலஞ்சார
மாவிழியால்வெலுவோர்பதமாபதுமந்தானங்கோடி
வாடியுநேடியமாறுதிமாதருமந்தானங்கோடி
யேவளரப்புகழ்சூழிளசைப்பதியின்பாலன்பார்வை
யென்றவர்தங்களைநன்றுபுரந்துமையின்பாலன்பார்வை
தேவமுதாங்கருணாநிதிபெற்றவசெங்கோசெங்கீரை
தேர்ந்துரையாண்டியப்பேந்திரவுத்தமசெங்கோசெங்கீரை.()

அங்கோலஞ்சார=அழகிய அம்பு ஐந்து பொருந்த, அங்குஓல மிட. மா விழியால் வெலுவோர்=அழகிய நெற்றிக்கண்ணால் வெல்லும் சிவபிரானது. பதமாபதுமந்தான்=திருவடியாகிய சிறந்த தாமரையை. அங்கு ஓடி வாடியும்நேடியமால்=அவண் ஓடிவருந்தித்தேடியவிட்டுணு. துதிமாதருமம் தானம்=புகழும் பெரிய தருமமும் தானமும். இளசைப்பதியின்பால் அன்பு ஆர்வை=இள

க. ஆண்டியப்பபிள்ளை

சைநகரில் அன்பு நிறைந்தாய். உமையின்பாலன் பார்வை=பார்வதிபுத்திரனான குமாரக்கடவுளது கடாட்சம்.

செங்கீரைப்பருவம்முற்றிற்று.

ஆகப்பருவம் உ-க்கு பாட்டு எ.

## ௩-வது தாலப்பருவம்.

கந்தமுறுதண்பொதும்பரளிக்காடும்புயலுந்துணையெனநீங், காதுசேர்த்துப்பொருவதனைக்காணூஉமதுவைச்சிறையிருக்க; வந்தபுயலைச்சஞ்சலமேமருவப்பசும்பொங்கருமலைந்து, வணங்கிநிதங்காவெனத்திறையாமலருமளித்துக்கண்ணீரைச்; சிந்தியிரங்கப்புரிகுழலிற்றேந்தார்களோங்கைந்தருவினிடைச், சிறுமாமகளிர்வீசுமதைத்தேவர்புலவிமாதருக்குத், தந்துபுணர்ந்துபுகழினைசைத்தாளுபதியேதாலேலோ, சகத்தினுயராண்டியப்பபுரந்தரனேதாலோதாலேலோ. (க)

பொதும்பர்=சோலை. சிறை=இறகு, சிறைச்சாலை. சஞ்சலம்=மின்னல், துன்பம். கா=சோலை, காப்பாற்று. கண்ணீர்=தேனாகியநீர், கண்ணீர்.

நவிலுந்துகிலமருங்கொடிக்கணந்தேமடவார்மருங்கொடிக்க
நாட்டுமாகமுகிலையுறநணுகிமாகமுகிலையுற
அவிர்தேனுவின்வானரம்பாயதறுந்துவிழவானரம்பாய

அரியைவிலகாவணங்குலவவமையுமலர்க்காவணங்குலவத்
திவள்மாதருக்குச்சந்தோடத்தேன்மாதருக்குச்சந்தோடத்
திருவாய்வனசத்திரந்தழைக்கத்திரண்டுண்ணசத் திரந்தழைக்
தவழும்புகழ்செய்வளத்திளசைத்தாணுபதியேதாலேலோ[கத்
சகத்திலுயராண்டியப்பபுரந்தரனேதாலோதாலேலோ. (௨)

துகிலமரும் கொடிக்கணம் தேமடவார் மருங்குஒடிக்க=சீலை பொருந்திய கொடியினம் தெய்வப்பெண்களின் இடையை ஒடிக்க. மாகமுகிலை=ஆகாயத்தின்மேகத்தை. மா கமுகுஇலைஉற=அழகியகமுகின் இலைமேவ. தேனுவின் வால் நரம்பு ஆயது=காமதேனுவின் வால் நரம்பானது. வானரம்பாய=குரங்குகள் தாவ. அரியை விலகா அணங்கு=விட்டுநீங்காத இலக்குமி. மாதருக்குச்சந்தோடத்தேன்=சிறந்த களிப்பும் சந்தோஷமுமுள்ள தேன்வண்டு. மாதருக்குச்சந்தோட=பெண்கட்குத் தாது போக. திருவாய் வனசத்து இரந்து அழைக்கத் திரண்டு உண் அன சத்திரம்தழைக்க=அழகிய வாயாகிய தாமரையால் பணிந்து அழைக்க (விருந்தினர்) திரண்டு அருந்துகின்ற அன்னசத்திரம் செழிக்க.

தங்கமணிச்சிகரபணைமேற்றங்கவிளங்கியெங்கணுநித்
தங்கதிரைவீசப்பெயர்மாதங்கமெனக்கொண்டதற்கேற்பத்
தங்கள்கரியநிறத்தைவிடுத்தங்கமுழுதுஞ்சேர்ந்திருதந்
தங்கவினும்பல்லிபங்கள்மிகுந்தங்கணுலவுமிளசையின்முச்
சங்கமகிழ்ந்துபுகழுமிரசங்கனியமுத்தமிழ்கள்பிர
சங்கமியற்றுங்கருத்தமுத்துச்சங்கநிதிபாலுதித்துமுக்கட்

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

சங்கரனைப்போற்றிப்பணியுந்தானுபதியேதாலேலோ
சகத்திலுயராண்டியப்பபுரந்தரனேதாலோதாலேலோ. (௯)

தாலப்பருவம் முற்றிற்று.

ஆகப்பருவம் ௯-க்குப்பாட்டு ௧0.

---

# ௪-வது சப்பாணிப்பருவம்.

---

வானகமடுத்தலாலெழுதுளியமைந்ததான்மணியாழியுற்ற விரலான், மன்னிலவணக்கமிகவாங்கிடக்கும்பிடுவதாற்கனக மின்னிவரலாற்;பூனலங்காட்டலாலுறுதியாகத்திற்பொலிந்திடுதலாலுமுன்னை, போன்றனமெனக்கருவமேவியெதிரிட்டிடுபுயற்குழாமுழுதும்வெருவ;வேனலமரப்படியார்க்குமிடிதருநீயெமிணையோவெனச்சீறியே, யிருபொருத்தனமினிச்செல்லெனச்சொற்றிடவெடுத்திருகைகொட்டுவதுபோற்; ருனநிகரெட்டபுரம் வளராண்டியப்பமுகில் சப்பாணிகொட்டியருளே, தப்பாதுதுட்டர்களையெப்போதும்வெட்டுபவசப்பாணிகொட்டியருளே. (௧)

வானகமடுத்தலால்=வெள்ளியநகம்பொருந்தலால், மேலிடத்தில் நிறைந்திருத்தலால். எழுதுளி=எழுத்தாணி, எழுகின்றநீர்த்திவலை. மணியாழி=இரத்தினமோதிரம், அழகியகடல். விரல்=கைவிரல், வலி [illegible] மன்னிலவணக்கம்=நிலைபெற்ற உலகத்தார் வணக்கத்தை, [illegible]கி உப்புநீரை. கும்பிடுவதால்=அஞ்சலி

த்தலால், கூட்டமிடுவதால். கனகம்—பொன், கல்மலை. பூ—மலர், பூமி. உறுதியாகம்—மிக்ககொடை, பயன்றரும் யாகம். ஆர்க்குமிடி—யாவர்க்கும் வறுமை, முழங்கும் இடி. செல்—போ, மேகம்.

அரியசிறு நூன்மருங்கந்நலார்செவ்வரியினம்பகமதுக்கு மூரநின், னருட்டேன்மணத்திடுமுகத்தாமரைப்போதவாவிப் பராவிவாவித்; தருமிச்சிலாக்காதுகைதட்டியோச்சிடு த றனையொப்பவும்பன்மடவார், சந்தமிகுபுருடர்கண்வழுக்கிடாதிட்டகற்றங்கிளங்கொங்கைமலையில்; ஒருமூச்சுறப்புரிந்தாலுஞ்சிவக்குநினதொண்கைகொடுதாடனஞ்செய், துறுங்கால்வருந்துமென்றஞ்சுபுபழக்கமிடலொப்பவுமுடுக்கையேந்து; சருமதரனைத்துதிசெயாண்டியப்பேந்திரா சப்பாணிகொட்டியருளே, தப்பாதுதுட்டர்களையெப்போதும்வெட்டுபவசப்பாணிகொட்டியருளே. (உ)

வேறு.

கந்தமலிந்தபசுங் குழலம்பிகைகட்டியிருப்பாணி
கல்லவும்வல்லவெமுள்ளமுவந்துதிகட்டியிருப்பாணி
வந்தயாபரிதன்னிருகொங்கையமட்டுமருப்பாணி
மலனொடுகந்தனையருளொடுதந்தவண்மட்டுமருப்பாணி
இந்துபுனைந்தவனோடுசமந்திடவிட்டதிருப்பாணி
யென்றகுலந்தனில்வந்தவதானவலி[illegible]ப்பாணி

கொந்திதழும்புயம்வென்றிகொளும்படிகொட்டுகசப்பாணி
கொங்கிளசைப்பதியாண்டியப்பேந்திரகொட்டுகசப்பாணி. ( )

கல்ல=தோண்ட. கொங்கை அமட்டும் மருப்பு ஆள் நிமலன்=தனங்கள் அச்சுறுத்தும் தந்தத்தை ஆளுகின்ற விநாயகர். மட்டு மரு பாணி=தேன்போல் மணக்கும் பண்ணையுடைய உமை. சுமந்திட இட்ட திரு பாணி=சுமக்கவைத்த சிறப்புற்ற கங்கை. திருப்பாணி=தானலட்சுமிவசிக்கும் கை.

சப்பாணிப்பருவம்முற்றிற்று.
ஆகப்பருவம் ௨-க்குப்பாட்டு ௧௩.

## ௫-வது முத்தப்பருவம்.

சந்தமடமாதரைமேடைத்தலத்துத்தரிசித்தரிமயங்கித்
தாரையிமையாதாயிரம்பெற்றநிலைமகிழ்கூர்ந்தருகுறுங்காற்
கந்தபலிபக்கனைந்துலர்செங்களபக்குவியல்மகுடவலங்
காரத்துரைமார்செலுத்துபரிக்காலிற் பொடிபட்டெழுந்துமி
ருந்தவருநற்பனல்போற்கணுறுத்திவிராவின்றுநமக் [ஞ
குளதாமிழுந்தோமென்றவன்வீழ்ந்தோடமுடிக்குமிளசையிற்
முந்துங்கருத்தமுத்தின்றமுதத்தேமுத்தந்தருகவே [சீர்
ரூண்டசமர்வெலாண்டியப்பமுதல்வாமுத்தந்தருகவே. (௧)

அரி=இந்திரன். தாரை=விழி.

கொத்துமலர்க்கான்வீசியண்டகூடத்துவரைநீண்டிடுகோக்
கொண்மூநிகரப்பொழிமதுவாற்குலவோராழித்தேருமதிற்
றத்துபரியுமவைகடவத்தகுவலவனுந்தானுநனை
தரவும்பலவீமொய்த்திடவுஞ்சகிக்கமுடியாதனுதினமுங்
கத்துங்கடலிலலைமுழுதுங்கமுவிமுழுகிப்பரிதிவரக்
காணுமிளசைமாநகரைக்காக்குமமைச்சனேமடவார்
முத்தம்பதிக்குமுத்தநகைமுகிழ்வாய்முத்தந்தருகவே
மூண்டசமர்வெலாண்டியப்பமுதல்வாமுத்தந்தருகவே. (உ)

வேறு.

மெல்லியரிடம்போர்புரிந்திடுமதன் றனிடம்வெஞ்சினம் வளர்ந்துகணையாய், மேவுமலரிற்சிலபறித்துக்கொடுந்திறம்வி ளைக்குமம்மொதொன்றையுந்தன், வல்லபமாலையாய்ப்புல்லியின் புதவிபிடுமாறுநனிசெய்துமற்றை, வார்கணையைநீளணைபரப் பிக்கரங்கமடமாதரையமைத்துமூலமே; னல்லகொடைகற் றகைபுனைந்ததரமும்பருகினன்குபலகோடிகரணம், நடத்திச்சு கத்தினையளித்துத்திருந்தின்பநரலையுறு போதுமொருபொய்; சொல்லியறியாதசெந்தமிழுமுதற்றுசெந்துவர்வாயின்முத் தமருளே, துரைமார்கள்மெச்சிளசைவளராண்டியப்பசெந் துவர்வாயின்முத்தமருளே, (ங)

முத்தப்பருவம்முற்றிற்று.

ஆகப்பருவம் ரு-க்குப்பாட்டு கக,

# ௫-வது வருகைப்பருவம்.

தேனாறுபாயவளமுறுமருதமென்னுந்திறற்பெருங்காவலாளி, செம்பொனுலகுக்குமேலுஞ்செலவளர்த்திடுசெழுங்காவினோடெதிர்த்து; வானாறுகற்பமத்தேனால்வளர்ந்துவருவதுகண்டுசீறியந்த, மன்னவனெடுத்துவாள்வீசிக்குறைத்திடுதன்மானவெடிகொண்டவாளை; கோனாறுமைமந்தருக்கொம்பைமுறித்துமிக்குவ்விலுறவீழ்த்திவந்து, கோடிதமமெதிர்நோக்குபெடையொடுகலந்துசெங்கோகனகமீதுதூங்கத்; தானாறுகாலிசைமுழக்கிளசை பூரவதரித்தபுகழோன்வருகவே, தாண்டுபரிதூண்டுதிறலாண்டியப்பேந்திரவுதாரமகவான்வருகவே. (௧)

## வேறு.

விரியுமலையைமேலாக்கிமீறுமலையைக்கீழாக்கி, வீறுதணித்தகரமுனிவன்மிகப்பாரிகழுங்குறள்வடிவ; மொருவிடங்கமேனியொடுமுதித்தானெனவுய்வாணிமட, முறுபெணுருநீத்தாண்மைகொடுமுதித்தானெனவும்புகழ்ந்துதினம்; நரர்கொண்டாடுஞ்சிவகாமிநாதகவிஞனெனும்வழுதி, நாட்டிற்சிறந்தவளத்திளசைநகரிற்பிறந்தபெருந்தமிழா,கரனுங்கருத்தமுத்தீன்றகனியேவருகவருகவே, காரார்கொடையாண்டியப்பவுபகாராவருகவருகவே. (௨)

தாராளமுங்கொண்டருள்புரியுதாராவருகதசரதசீ
தாராமனைப்போலுதித்தவவுதாராவருகநினதுமுக
தாராபதிகண்டலர்குவளைத்தாராவருககவிஞருக்கா
தாராவருகமணஞ்செயிருதாராவருகவுலுத்தர்கணுங்
காராவருகதிவியவலங்காராவருகவிளைசையிற்சிங்
காராவருகதெவைப்புரிசங்காராவருகநீதிவிப
காராவருகவமைச்சினதிகாராவருகவருகவே
காரார்கொடையாண்டியப்பவுபகாராவருகவருகவே. (௲)

வருகைப்பருவம் முற்றிற்று.
ஆகப்பருவம் ௬-க்குப்பாட்டு ௬௬.

---

# ௭-வது அம்புலிப்பருவம்.

---

குணக்கட்லுதிக்குமதியோனருந்தமிழ்தினங்கொள்பவன்று
ரையருளோன், கூடியகலாநிதியனென்றனையுமோதலாற்
கோவாந்தனக்குநிகரா; மணத்தவனெனக்கணியழைத்தன
னதன்றியுன்மாட்டுறுநிலாக்கதிரையும், வருநினதுசிறுமை
யொடுநீகலகமேசூழவந்துபயமேவுதலுமிக்; கணத்துறத்திரு
வுளத்தெந்தையுணராமையுன்கண்ணுற்றயோகமேகாண்,கன
கநாட்டும்புகழ்விதைத்திடவுழுந்தனைமகாணமேழித்துவசு
ம்வின், அணைக்கரமெடுத்துயர்த்திடுமிளைசையூரனுடனம்புலீ

யாடவாவே, அத்தனருள்பெருகாண்டியப்பமுகிலுடன்வேண்டியம்புலீயாடவாவே. (க)

குணக்கடல்—கீழ்கடல், குணகரம். அருந்தமிழ் தினங்கொள்பவன்—அருந்துகின்ற அமுது இன்னங்கொள்பவன். அரியதமிழ் தினங்கொள்பவன். தாரையருளோன்—நட்சத்திரங்களையுள்ளவன், கண்ணருளுள்ளவன். நிலாக்கதிர்—நிலாவொளி, நில்லாக்கதிர். சிறுமை—சிறியகளங்கம். கலகம்—மலையிடம். பயம்—கடல்நீர்.

இராவோனெனத்திரிதியாதலாலுன்றனக்கேற்றனவளிக்கவலவோ, வின்றுநன்றன்போடழைத்தனனதுணராதெழிற்றிருமுகத்தெதிரியாய்; வரலாலழைத்துநமையுந்துன்பியற்றியிடுவானென்றுவந்திலாய்நீ, வள்ளன்மைபெற்றவிவனுள்ளன்மைதேர்கிலாய்மருவார்களென்றுநினையான்; தருமிடத்தன்றியுங்கலைவாணனுழைத்தான்மிகமகிழ்ந்துதரவோர், தடையும்வாராதுனையழைத்தகரமேதருத்தானென விமைக்குமின்னம், அரகராதாமிதமெனுமிளசையூரனுடனம்புலீயாடவாவே, அத்தனருள்பெருகாண்டியப்பமுகிலுடன்வேண்டியம்புலீயாடவாவே. (உ)

வந்திலாயென்றிவனுனைச்சினந்திடுபோதெம்வள்ளலே நீகையாலும், வாயாலுமேககாலத்தழைத்திட்டதையிவண்சொந்தவாம்புன்மாதும், கந்தமுறுசெங்கமலமென்னவருபுதி

ரவோர்களவுப்புணர்ச்சிமொழுங், காணவெளியாயுமறைவாயு
நமையின்றழைக்கவுமானதிவரிலெவள்பாற்; சிந்தனையுடன்
சேர்வமென்றுதெளியாதுவந்திலனென்றுகோடிகோடி, செப்
பியிதுகாறுமேதப்புவித்தனமினிச்சிறிது நீதாழ்க்கின்றே,
அந்தரமடைந்திடுதிதிண்ணமிளைச்சுகனொடம்புலியாடவா
வே, அந்தனருள்பெருகாண்டியப்பமுகிலுடன்வேண்டியம்
புலியாடவாவே. (௯)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

ஆகப்பருவம் ௭-க்குப்பாட்டு ௨௨.

---

## ௮-வது சிற்றிற்பருவம்.

---

புதிதாவிருந்துசமைத்துனையன்பொடுவந்தழைக்கப்போ
வமென்று, புந்திநினைந்தோமதற்குமுனம்போந்தாய்வலியமி
கமகிழ்ந்தோம்; அதுநீயுணராதெஞ்சிறுவீடழிக்கமுயன்று
யழிக்கினுநின், னருமைக்கருணைமாதாநீராட்டிச்சதங்கை
சிலம்புதண்டை; பதுமக்கரத்தால்வனைந்திடுநின்பதத்திற்படி
ந்தபுழுதியினைப், பணிந்துவிழிநீருகுத்தாட்டிப்பரிந்துகழுவு
வோமலது; கறுவச்சினந்தியாதுசெயக்கடவோஞ்சிற்றில்சி
தையேலே, காண்டீபனுநேராண்டியப்பகனியேசிற்றில்சிதை
யேலே.

திருமால்வெங்கடேசுரெட்டசெல்லமகராசேந்திரனைத்,
தினையும்வணங்காரகமோவிச்சிறியேமிழைத்தசிறுவீடு;தருமா
மணியேயஃதிலேயேற்சாற்றுமவனெனக்கற்பினகந்,தனைநேற்ற
ழிக்கப்பவனியெழுந்ததுபோலின்றுமுனதிடத்துப்; பெருவீ
தியில்யாம்புரிந்திடுகற்பினகந்தனையுமழித்திடற்குப், பெரிது
த்தரவுங்கொடுத்தனனோபெண்கட்கிரங்கிநீகூடக்; கருணைபு
ரியாதிருக்கிலெவர்காப்பார்சிற்றில்சிதையேலே, காண்டீபனு
நேராண்டியப்பகனியேசிற்றில்சிதையேலே. (௨)

இனியநேயமிகுதியினாலிங்குநினைக்கண்டெழுந்திருந்தோ,
மில்லேமதற்கெம்வினையாட்டினில்லையில்லையெனப்புரிதன்;
மனுநீதியதோவிதற்கோநின்வரவையெதிர்பார்த்திருந்தோஞ்
சொல், வரனார்தலையிலிருந்தபுனன்மடமான்றலையிலிருந்தம
லர்ப்; பணியின்பகைவன்மனைதலையிற்பதிவாயிருந்தவோரிர
ண்டு, பாவையருஞ்சூழ்மேவியிருபகுதிப்பொருளுமிகுதியு
றக்;கனிவாய்வளர்க்குமிளசையலங்காராசிற்றில்சிதையேலே
காண்டீபனுநேராண்டியப்பகனியேசிற்றில்சிதையேலே.(௩)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

ஆகப்பருவம் அ-க்குப்பாட்டு ௨௫.

# ௯-வது சிறுபறைப்பருவம்.

தெண்டிரைமுழங்குவதெனத்தமிழ்ச்சங்கந்திரண்டுகவிகொடுமுழக்கச், சிங்கமன்முழங்குவதெனச்செயச்சங்கஞ்செழித்துவிருதுமுழங்கக்; கொண்டல்கண்முழங்குவதெனப்பொன்னின்சங்கங்குனித்துவாழ்த்தொலிமுழக்கக், குலவுமணிமும்முரசுமதிர்பெறமுழக்கியிடுகோலமுறுமிளசைநகர் வாழ்; வண்டிசைமுழக்கவருதண்குவளைமார்பனேவண்புகழ்முழக்குமதுலா, வார்கழல்முழக்குபதபங்கயவரோதயாவலமேருமெவிவேறமுன்; செண்டொடுமுழக்குதல்செயாண்டியப்பேந்த்ரமுகில்சிறுபறைமுழக்கியருளே, திங்களொடுதங்கிவருகங்கைகுலதுங்கதரசிறுபறைமுழக்கியருளே. (௧)

ஓராயிரம்படப்பாந்தளினுறங்கியிடுமூர்த்தியைநடாத்துமேகற், குற்றமேதேர்சுற்றுதிருவாடையையெடுத்துண்டுமிழ்ந்தமுனிவாழுமலைமே; னேராயெழுந்துவடதிக்கோடிரதமேறிநீள்கதிர்க்கவிகையதனை, நிக்கலுமலர்ச்சோலைபுட்கவிகையானுறநெருக்கிப்பிடித்துமுன்று; ளோரானகுருதேவிதன்னைப்புணர்ந்தபவமிங்ஙனமடித்ததெனவே, யிருக்கிப்பிழிந்தமுதெடுத்துமந்திக்குமுதலீந்துண்டுகூடிமகிழ்கூர்; சீராருமிளசைநகராண்டியப்பேந்த்ரமுகில்சிறுபறைமுழக்கியருளே, திங்களொடுதங்கிவருகங்கைகுலதுங்கதரசிறுபறைமுழக்கியருளே. (௨)

இங்கிதமாறுஇங்கிதமாறுஎங்கணுமானவனே
இன்பசுபாலாஇன்பசுபாலாஎங்கணுமானவனே
சங்கமதுரையேசங்கமதுரையேதருமதுரந்தரனே
தந்திரனேயாதந்திரனேயாதருமதுரந்தரனே
அங்கவித்தாராவங்கவித்தாராஅண்டரையேபொருவாய்
அமைச்சதிகாராவமைச்சதிகாராஅண்டரையேபொருவாய்
கொங்குறுதின்புபவாண்டியப்பேந்திரகொட்டுகசிறுபறையே
கொட்டமிடும்பரிதட்டிநடத்துவகொட்டுகசிறுபறையே. (௩)

இங்கிதமாறு இங்கிதமாறு = இவன் இதம்மாறுத சந்தோஷத்தையுடைய பாண்டியனே. எங்கணுமானவனே = எவ்விடத்தும் பெருமை பெற்றவனே. இன்பசுபாலா இன்பசுபாலா = இனியபசுக்களைக் காப்பவனே, இன்பத்தைத்தரும் நற்குமாரனே. எங்கணுமானவனே = எமது கண்ணையும் ஒத்தவனே. சங்கமதுரையே சங்கமதுரையே = (தமிழ்ச்) சங்கமிருந்த மதுரையையேசேர்ந்த தலைவனே. தருமதுரந்தரனே = தருமரக்ஷகனே. தந்திரன் ஏயா தந்திரனேயா = வஞ்சம்பொருந்தாத நூல்களிடத்துஅன்புற்றவனே. தருமதுரந்தரனே = கற்பதருவின் இனிமைக்கொப்புற்றவனே. அங்கவித்தாரா = சேனைகளின் பெருக்கமுடையாய். அம்கவித்தாரா = அழகிய பாமாலையுடையாய். அண்டரையே பொருவாய் = பகைவர்களைச் சமர்செய்பவனே. அமைச்சதிகாரா = மந்திரியுத்யோக முடையாய். அமைச்சதிக்ஆரா = அமைத்த திகாந்தங்களிலிருந்து (திறையாக

வருகின்ற) முத்துமாலைகளையுடையாய். அண்டர் ஐயை பொருவாய்=தேவர்களரசனை இந்திரனையொத்தவா. எ. று.

சிறுபறைப்பருவம் முற்றிற்று.

ஆகப்பருவம் ௯-க்குப்பாட்டு ௨௮.

---

## ௰-வது சிறுதேர்ப்பருவம்.

---

வாரிதி முகட்டிடை யெழுந்திருள் குடிக்கொளிரு வான்பரிதி வரவுமவனை, மணிமகுட முடிமெங்கள் வேள்குமா ரெட்டதுரை மகிபனது தேரினெதிராய்; ஆரிவனெ ராழிரது மேறிவர லென்றுசின மாகித் துரசக்கழைகளால், அங்கமுழு வதுமிரத் தங்கொப்பு ளிக்கவுமெ யலமந்து சேந்துவென் றித்; தாரியலும் வாசிரத முருளப்பு ரண்டுவலி தாங்கமுடி யாதுபுனலிற், றங்கவு நினைந்துவரி மூழ்கிட வடித்துநிந் தமுமுடுக் கிளைசை நகர்வாழ்; சீரியலு முக்யமந் திரியாண்டி யப்பமுகில் சிறுதேரு ருட்டியருளே, திருநா விரட்டியரை யழகான் மருட்டுபவ சிறுதே ருருட்டியருளே.

விரதமார்க் கண்டனுங் கண்டதிச யித்துற வியந்துதுதி கூறுமாறு,மேதினியி லாகம விதிப்படி நடந்திடு விவேகமணி யாகலருமென்; சரதசண் முகபதிபி ஞேனெனை வுதித்தெ

வர் தமக்குமுன் னேனுமான, சராசரஞ் சிதசுகுண சமுகசோ
லாகலவி தரணாகர கபலதருண; வரதசுக மதுரவச ன
மிர்தகிர் பாகரகு வலயபரி பாலதிலக, பகிபசற் சனதூரங் தப
னிசைய கெப்பீர மங்கள விலாசகுலவச்; சிரதர வலங்கிருத பு
கழாண்டி யப்பமுகில் சிறுதே ருருட்டியருளே, திருநாவிரட்
டியரை யழகான் மருட்டுபவ சிறுதே ருருட்டியருளே.

சந்தமுறு செகவீர ராமக் குமாரெட்ட தளதுரையும்
வாழுமகிமைத், தாளுப திப்பெருமை பெறுநீயும் வாழுநீ தா
ன்பெறுமகாருங்வாழ; வந்துவளி நின்றமரும் வாழுநின்
பெருநிதியும் வாழுநின் கொடையும்வாழ, வாய்ந்தமீ னாட்சி
சுந் தரமெனுநின் மருமானும் வாழுவவ னேருமதூரச்; சுந்
தரமி குந்தமிழும் வாழுநின் னேயந் தூலங்கவரு வோரும
வாழத், துதிபெறுநின் னிளசைநக ரமும்வாழ நம்மையுந் தொ
ண்டுகொளும் வேலர்கருணைச்; செந்திருவும் வாழவளர் புக
ழாண்டி யப்பமுகில் சிறுதே ருருட்டியருளே, திருநா விரட்
டியரை யழகான் மருட்டுபவ சிறுதே ருருட்டியருளே. (௰)

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.

ஆகப்பருவம் 10-க்குச் செய்யுள் ௱க,

பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

உ

குமரன் துணை.

## க. ஆண்டியப்பபிள்ளை

அவர்கள் மீது

# உதாரசோதனைமஞ்சரி.

## காப்பு.

நாதனைப்போற் றண்டியப்ப நம்பதிமேன் மிக்ககொடைச்
சோதனைப்பா மஞ்சரியுஞ் சொல்லிடவே—சீதவொளி
கக்குஞ் சரமெனக்குக் காப்புறுதே வீன்றமத்த
கக்குஞ் சரமெனக்குக் காப்பு.

## நூல்.

கங்கையணிசடைப்பெருமான்கண்மணியென்பதுதேற்றக்கண்ணிற்றோன்றிச், செங்கையணிபெறப்பனிருதொகையாக்கொண்டின்னமுமோர்தினையுந்தாழாக், கொங்கையணிமலையபலைகொடுத்தசுவைப்பாலையவாக்கொண்டுண்டென்றுஞ், சங்கையணியவர்க்கொழித்தெனிருதயத்திலிருந்தருளுந்தனிப்பெம்மானை. (க)

பொருந்தாகமறக்கொடிக்குப்பகிர்ந்தவனைவென்றமதன்புகழ்ச்சீராம்பல், முருந்தாகமறத்திவிளையாடுசெவிவளையாவென்மோகமான்செய், விருந்தாகமறக்கமுடியாததினைமாவருளவிரைந்துவாங்கிப், பெருந்தாகமறக்கனிவாயுறக்கனிவாயருந்தவந்தபிரியத்தானை. (௨)

மயங்கடம்பமாதிபுரிமாதரையவாவிநிதிவழங்கிப்பூம்பண், கயங்கடம்பமாருமதிக்கடவுள்வணக்கஞ்செய்முலைக்கயங்கட்கிந்தப்,புயங்கடம்பமாகவுஞ்செய்புல்லறிவுளோன்றவறும்பொறுத்தாண்டேகித், தியங்கடம்பமாலிகைசேர்த்தியதிருத்தோளிலங்கவருஞ்செவ்வியானை. (௩)

பத்துருக்கந்தனைப்பொருந்திப்பாவியெனச்செனித்திலங்கைப்பதிவாழ்ந்தோன்மார், பத்துருக்கந்தனைத்துமொல்லாகவுஞ்செய்மான்மருகப்பரனைத்தந்நெஞ்,சத்துருக்கந்தனையரிடந்தனிலுமுருமுழுக்கொடும்பாதகரைக்கொல்லுஞ்,சத்துருக்கந்தனையாறுதலையானைமலைமகண்மதலையானை. (௪)

மன்மகவானவுணர்துயர்மாற்றியபேருதவியின்கைமாறுயாழைச், சென்மகவானிலங்குசசிச்சேயிழையோடெழுந்துவந்துசீராஞ்செல்வத், தன்மகவானதையுதவமணந்தானையிகழ்ந்தவர்முன்சனியென்றோது, வன்மகவானுட்புகுந்துவருவதுபோனடத்திவருமயிலினானை. (௫)

தருவானையளித்துவரந்தருவானைக்குறப்பெண்ணொடுந்தழைக்குந்தெய்வ, மருவானைமகளையன்றிமருவானைஞானமுழு

வதுமிப்பாவி, கருவானையாதுறப்பகருவானையூருபுயங்களி லுற்றுடி, ஒருவானையூர்வானை ஒருவாமலுலவாமலுலவுவானை.

அடிக்கவரங்குன்றனையுறுகண்முலைவயிற்றரொடுமமரர் தம்மை, நடிக்கவரங்குன்றனையெனச்சூழ்ந்துவரச்செயயிரா ணியென்பாற், படிக்கவரங்குன்றனையதிபவெனப்புரிசூரன் படச்செய்தானைக், கொடுக்கவரங்குன்றனைக்கோதில்பரங்கு ன்றனைக்குணக்குன்றனை. (எ)

இருதயவாரிசமலரிலிருத்தியநுதினமுமதியென்றேறு ங்க, திருதயவாரிதிநிகரன்பூற்றெடுக்குங்கவிமாலைதிகழச்சூட் டிக், கருதயவாரினியதுணைகடவுளினீயலதெனவுங்கனிந்த னேன்பால், வருதயவாரிகபாரத்துவாழ்க்கைவளர்ந்தேறிநனி மகிழுவோனே. (அ)

திருந்தடங்காப்பேரிசையித்திருநகரின்முழக்குதலாற்றி னமுஞ்செங்தேன், விருந்தடங்காப்பயங்கொடருந்தாதுசுரும் பெனவதற்குமிகுமன்போடு, பொருந்தடங்காட்டானைமுலை ப்பூமகளுவினன்செவியைப்போக்கிச்செய்யப் பெருந்தடங் காக்களின்மதுவண்டுளுமினசையவதரித்தபெருமையோனே

காத்தகுலாபக்கனியாவருக்குமருடென்மலைச்சிகரத்தி ன்மேலங், காத்தகுலாவெனமுடிமேய்புயலைவழுதிசிறைக்க ளிடவேசோ, காத்தகுலாவைந்தருவோஞ்கனிவாலேபுனை

கொடுத்தக்கணமேயக்கார், காத்தகுலாதிபனெனவேவுலகமெலாமேத்திடுசீர்க்கனமுள்ளோனே. (௧௦)

செவித்துவருநிகராதசெவ்விதழார்க்கங்கசன்யாசிப்போர்க்கம்பொன், குவித்துவருநீக்கிவரையாதுபொழிபுயலெனக்குக்குயப்பாளூட்டித், தவித்துவருந்தலைத்தவிர்க்குந்தாயையளித்தவனெனவுந்தரணிமீதுற், பவித்துவருங்கருத்தமுத்துப்பாவலன்பாற்சண்முகன்பின்பாவுற்றேனே. (௧௧)

வன்னகவிராயவிதழ்வாணிசகவுருவெடுத்துவரைசெயாணி, முன்னகவிராயசஞ்செய்திடவரினுந்தோலாதமுதமேயென்னுஞ், சொன்னகவிராயகவிசொலியவதானம்புரிவித்துவான்கடெய்வ, மன்னகவிராயநெல்லையப்பமகராஜன்னேயங்கொண்டோனே. (௧௨)

அரவசனம்புரிதேரையாகவறுமைபிணிமுழுவுமவரைத்தாணுத், தரவசனங்குறாதனதனைக்கவுநோக்குங்கருணைத்தடங்கணாளா, வரவசனன்புறுமடியார்மலரடியையமறவாதமனத்தனேம, துரவசனங்கடவினமுதுங்கசக்கவந்திடுசெந்துவர்வாயோனே. (௧௩)

இலகடிதமுடியணியாதெதிர்த்தவரினுடலினிடையெழும்பேய்நாயின், வலகடிதங்கிடச்செயவில்வளைக்குமிருபுயத்தானேமருமானேபொய், யலகடிதங்கணுப்புவனிவேண்டுவே

கேள்வருந்தேலென்றளியேனுக்குப், பலகடிதமருமைமிகப் பாராட்டியெழுதியகைப்பதுமத்தானே. (௧௪)

கருநாணையேற்றிமலர்க்கணைதொடுத்துமாரன்மயக்கஞ் செய்மாதர், பெருநாணைவளையலொடும்பின்விடுத்துத்தொடுத்துணைநாம்பிரியாநாளே, திருநாணைவுறப்பிரிநாள்வெறுநாளேயாமதற்கெஞ்சிந்தையேக, வருநாணையெனமொழிந்துவரிதழும்புரிபெரியவனப்புள்ளோனே. (௧௫)

சரசமதனைற்புளகாங்கிதமுறவேபுரியுமடந்தையர்தங்கொங்
யரசமதனைகவினையாடிடுவச்சிரமார்பாவலனியாள்வத் [கை
திரசமதனைகரதபோராஞ்சிதசுதனைசெழித்தமாமோ
கரசமதனைகருணைகரசுமுகாதுரந்தரசிங்காரமாலே. (௧௬)

*பொருகுசிதம்பரவியவாபெருந்தருமபுரந்தானேபெலமாயூர, வருமல்லேநீர்வளமருங்குற்றாலபராபோதுறைசைவலவிலோதர், இருகுடந்தைவருசீரங்கமுளாயென்மாமதுரையேயவந்தோர்க்குந், தருவிபரங்குன்றனேசெந்திநகரனையளையமதமிழ்வல்லோனே. (௧௭)

மருங்கந்தப்பாதயிலாமாசுணநேராமெனும்பூமகளிர்பார்வைப், பிருங்கந்தப்பாதுணைப்பேரழகூருந்திருமுகச்சப்பிரம

*. சிதம்பரம் தருமபுரம் மாயூரம் குற்றாலம் துறைசை குடந்தை சீரங்கம் மதுரை பரங்குன்றம் செந்திநகர் என்னும் பத்து ஊர்ப்பெயர்தொனிக்கக்கூறியது.

மகாமகோபாத்தியாய

ழுமா, அருங்கந்தப்பாகனையகவிதைதொழிந்திடுமணியேயரு
மையாயா, வருங்கந்தப்பாவெனவுமொருபெயரிட்டழைக்கி
ன்றவரிசையோனே. (கஅ)

கரவிசையாவரவிசையாகனகமகாகனகமகாகனிசைபோ
க, சுரதமனைவிரதமஞ்சுகமாராசுகமாரா துளாந்தமெல்லாம்
பருதுடையாவொருதுடையாபரவமராபரவராப திகாக்குஞ்
சேய்க், குருவினவாமருவினவா குலவரையா குலவரையாகுந்
தோளாமேன. (கசு)

தாண்டியப்பாகவனமெழும்படிவெல்பரிந்துலாதனத்
திற்சந்த, வேண்டியப்பராகவனசவடிபர்நாடகசமுகாவிலங்
குங்கூடற், பாண்டியப்பராகவனம்பாலடையாதகற்றியகற்ப
கதுகாக, ஆண்டியப்பராகவனவேந்திரகோலாகலவொய்யார
கோமே. (உ0)

ஒருவாருடமாகதம்பால்வந்திலேபேனனக்கடிதுபுரிமேயற்
கிந்த, வொருவருடனனுப்பிவினவினதாற்கேளேநவுஞ்சொல்
வன்பூங்காலேத், திருவருடவாரியினிந்திரைபுரியாயனும்புக
ழத்தினதின்போலத், தருவருடங்கினவரெவரெனவிதுநாள்
மட்டிலுஞ்சோதனைசெய்தேனல். (உக)

சோதனையான்புரிந்ததையுஞ்சொல்லுவன்கேள்முதலி
லொருசமேதக்கொம்பு,நாதனையாருந்துதிக்கைபெற்றவனெ
ன்பாரெனவேநான்போய்ப்பார்க்கச், சாதனையாய்வண்டருக்

கேதான்றருமந்தானமுறுதரத்தனுளன், ஏதனையானிடம்
பயமென்றிருதயங்கொண்டரனைமனமெண்ணினேனே. ()

அவனையுமோர்பார்வையிலேதீயனெனமதித்துவிட்டே
னப்பாலந்தச், சிவன்மனைவியைநோக்கியொருத்தியறக்கொ
டியாளோர்தெரிவையென்றுங், கவலையுடனேசடைவாயிருக்
குமிகுவம்பியெனக்கண்டேனுக்ரன், தவமிகுதியாகமதைக்
கெடுப்பதற்கேவருவனெனத்தான்கண்டேனே. (உ௩)

பின்புமவன்மனைவிகொடுஞ்சூரியெனத்தெரிந்துவிட்
டேன்பெருமைச்செவ்வேள், என்பவனுங்கனகமுளானெனன்
னினுமுராசத்தனென்றேயியம்பப்பெற்றான், இன்பமுறும
வன்மனைவியரிலொருத்திவழுவைவளர்த்திட்டேவந்தாள்,
வன்புசெயுமொருத்திகடுங்குறத்தியெனத்தெளிந்துகொண்
டேன் மனத்திற்றானே. (உ௪)

அரிமுழுக்கமடமாகிக்கடனணுகித்தூங்கிடுவானவனி
ல்லாரில், ஒருபெண்ணொன்றுஞ்செய்யாள்மற்றொருத்திசெம்
மகரித்திரியென்றுற்றாய்ந்தேன், பிரமனனுமியானென்
னமுமெடுப்பானவன்மனைதம்பியரைநோக்கித், திருநாமங்க
ளவாணியின்னமுமேவஞ்சனெனத்தெரிந்திட்டேனே. (உ௫)

இரதியையமதனையனுபவிப்பவளென்றோர்ந்தனன்பின்
னிலங்குமிந்த்ரன், தருவனெனச்சொலினுமிடிக்கொடியவ

வன்மனைவிசயந்தனையேபெற்றாங்,கரியமருந்தருந்தியொருகாக்
மிலாதிருப்பள்வடக்கதிபன்றன்னை, சரையுமனைதொறுமி
ரக்கப்பார்த்திருப்பானென் றுணர்ந்தேன்றரணிமீதே. (௨௬)

## வேறு.

ஐந்தருவினமுங்கற்பமென் றுரைப்பதல்லதுவாசியா
தென்றும், இந்தவான்றேனுவெதுமருளாவென்றிசைத்திட
வருமிருநிதியோர், அந்தகன்பாலேயமைந்தனபுயனுமனுதின
மின்னலேங்காட்டும், சந்திரனிரவுகொண்டவனரியாசகமுறப்
பகலொறுந்திரிவான். (௨௭)

வஞ்சிநாட்டரசோசேரலன்மிகுந்தவளமுறுபொன்னி
நாட்டரசோ, மிஞ்சியகொடியபுலியனென்னுளும் விளங்கு
செந்தமிழ்நாட்டரசோ, அஞ்சுதலைமையாக்கைதவமெனவு
மங்கையினெல்லிபோலுணர்ந்தேன், மஞ்சுறுநிரைசேர்பவரொ
வணைப்புந்துவரினுமின்றிதுநிசமம்மா. (௨௮)

உனதுதிகாரப்பெயரினைக்கதிரோனுதவியமகன்பெறுபல
னுற், றினந்தொறுங்காளுளீகையுமுதவித்திகழ்ந்திடுசீர்த்தி
பெற்றனனீ, தனதிருகரத்தாலெடுத்தெடுத்தெவர்க்குந்தனத்
தினைவெறுத்திடக்கொடுத்து, மனமகிழ்வதினால்வெறுக்கை
யென்றொருபேர்வழங்கினர்பொன்னினுக்கம்மா. (௨௯)

பணிமொழியமக்கெதுசொல்லண்ணலேயென்னப்பரவிநின்
றேற்றவர்தமக்கும், அணிபிணைவிரும்பிவினவினரெனப்பூண

ளவிலாதனகொடுத்திடுவாய், கவிபுறப்பின்னுஞ்செலவிடை
தருவாய்கருணையங்கண்ணனேயென்னில், முனிவுடனிடபங்
கேட்டனமெனவேதோன்றியங்கவையுமீந்திடுவாய். (௯0)

வேறு,

நினதுபெருங்கொடைப்புகழையனந்தனொராயிரநாவா
னிகழ்த்திடினு, மனதிலொருசிறிதுமுடியாதஃதிங்கெவரிடத்
திலமையுமம்மா, வெனதுபெருமடமையினாற்சோதனைசெய்
திடப்புகுந்தேனிளசைராசா, மனமகிழ்மதியூகியெனதா
பப்பனெனும்வரிசைமாலே. (௯௧)

உதாரசோதனைமஞ்சரி

முற்றிற்று.

# விசித்திர எழுத்தலங்காரம்.

குகவா
குலவு
குவிகை

ஏர்செய் குகவாகுலவுகுவிகையெனுமூன்றெழுத்தேற்ற மொழிமூன்றிலினைமார், இங்குவெறியாடலைவிரும்பிடில்வி லக்கறுதலைய்ந்தமொழிகூறிவிடுவான்,இன்றாகிவந்திடிலடுத்த மொழிகூறியிறிட்டமொழிகூறிவிடுவான், இதுவன்றிமூன் சொன்னசொற்கள்நடுவுற்றதையெனக்கருள்வையென்னவ திலே; சேர்நடுவிலாததாற்பாடுவாணியதுஞ்சேர்த்தகலை மாலைமாற்றுச்,செய்வதனியாயமதில்முதலிலாததுமென்றேதே ர்ந்திலேனீறாகிக்கல், செய்யிஃதுமிற்கமுன்சொன்னமொழி மூன்றிலுஞ்சேர்கடையெழுத்தைமேவித், தென்றல்வரின்மு தலெழுத்தின்பேரொருங்குழைத்திடுவழிகளோடிவருவான்; வார்செய்நடுவில்லாதமுன்மொழியினேறுசைபலவாறுபுரிகுழ விதனிலும், வாய்விட்டிரங்கிமேல்விதமாந்துவாமொழிவருக் குமலருக்குமஞ்சி, மற்றுமப்படியானகடைமொழிகள்தேடி யேமறைவாயிருப்பமென்றே, மய்யலொடுதிரிகிறுளெனதரு மையானமகள்வந்துசுகலீலைபுரிவாய்; கார்செய்கொடையுங் கடையதாகக்கொடுத்துவருகர்ணமகிபாலபூமா, கல்விக்குணதி பதிசெல்லச்சுவாமிமகிழ்கருணைப்ரவாகமகிபா, கருத்தினி லினித்திடுதமிழ்க்கவிவிரிக்குங்கருத்தமுதேந்த்ரனீன்ற; காண்டிபாபாண்டியாதாண்டபரிதூண்டியிடுகெனவாண்டியப்ப மணியே.

# க. ஆண்டியப்பபிள்ளை

அவர்கள் மீது

# தனிக்கவிகள்

வணக்கா வியப்ப கடம்பின்றள் வருந்த வருந்தா
தெழுகணையைக், கணைக்கா வியம்ப முடியாமற் காமன் சாபத்
தினுந்தொடுத்துக், குணைக்கா வியம்ப திரும்பேரிக் குழலும்
விரும்பி யணைராமா, யணக்கா வியம்ப கருங்கம்ப னெனவாண்
டியப்ப மாமணியே. (க)

சுரும்பா கரும்பா வெனும்விழிக்கைத் தோகைக்
கேகைத் தாயருந்தக், கரும்பா கரும்பா லமுதினுங்க சக்குஞ்
சக்குஞ் சுழலுமொரு, அரும்பா கரும்பா சுகனுமெதிர்த்
துவந்தா ளிரங்கா யுனதுமனம், இரும்பா கரும்பா றையா
சொல் லெனதாண் டியப்ப மாமணியே. (உ)

பொலங்கா திலங்காத் திரங்குழலற் புதனா சிபலே
முலைக்குரல்கோ, கிலங்கா திலங்கா நின்றவளோ கிளிவா யுரையா
பிள்ளையெவர்க்கும், கலங்கா திலங்கா முறத்தனியே கட்டி

யிருத்தி யணையரக்கர், தூலங்கா திலங்கா புரியைவென்ற
தூரையாண் டியப்ப மாமணியே. (௩)

திருக்கு மருக்கப் பெறுதனகச் சிறியோ ரெனவே
பொருமிதங்கொண், டிருக்கு மருக்கச் சுறுபுலையி னிறுமாப்
பகலும் படிசெயவோர், கருக்கு மருக்கப் பாதரவுங் கனி
வாய் வருவாய் கடம்பணிப, வருக்கு மருக்கத் தாமருக்கும்
வணங்காண் டியப்ப மாமணியே. (௪)

தந்தந் தந்த மென்றுபர தமுஞ்செய் தறியாள் பிறும்
பல்கனி, தந்தந் தந்த மென்றுகசந் தனவென் றமிழ்ந்தாள்
மயலலைமி, தந்தந் தந்த மென்றுகிலுந் தரியா தெறிவாள்
குறிநிர, தந்தந் தந்த மென்றுரைச்சி தழுவாண் டியப்ப
மாமணியே. (௫)

விலையா பாரி பலருலையே விரும்பி வருந்தி யிட
வேசி, மலையா பாரி யெனத்தனத்தை வழங்கித் திரிவா
யீதவர்வஞ், சலையா பாரி னீதியதா தழைக்கும் புகழா வெது
சொலுவாய், எலையா பாரி சாதகரு விலையாண் டியப்ப
மாமணியே. (௬)

அடிக்க வடிக்கக் கரமேந்து மவர்த மாவி யனற்புழு
வாத், துடிக்க வடிக்கப் பணத்திலைவி சுவரு முளரோ
வுலையழைக்கும், படிக்க வடிக்கத் தலைக்குமெமைப் பரிந்து
விடுத்தாள் வருவைகரும், பொடிக்க வடிக்கப் பெறுரசப்பா
வுரையுாண் டியப்ப மாமணியே. (௭)

கும்பஞ் சங்கங் கொடும்பகையாங் குயமா மிடற்று மாதைமதன், அம்பஞ் சங்கங் கொடுங்கழுடுக் காது திரும்பா தருள்புரிவாய், கம்பஞ் சங்கங் கொடுஞ்சுமக்கும் கனமா ளிகையும் பொனுங்கவிஞர், தம்பஞ் சங்கங் கொடும்பறக்கத் தருவாண் டியப்ப மாமணியே. (௮)

விரகம் பிடிக்கும் படிதொடுத்து மிகச்சஞ் சலமே செயப்பொருவேள், துரகம் பிடிக்கு மரிக்கங்கந் தோவந் தோவந் தறுதாரீ, உரகம் பிடிக்குங் கொடியன்முத லோர்கள் மயங்க வேதராளா, கரகம் பிடிக்கு நேர்முழக்குங் கனவாண் டியப்ப மாமணியே. (௯)

மெலிய வலியத் தரும்புழுகும் விரும்பா ளரும்பா லூட்டுமொரு, சலிய வலியத் தருங்கடனஞ் சாயுண் டெமிழ்வாள் மதனேவால், புலிய வலியத் தருஞ்சகிக்கப் போமோ விவளீ யணோகவிக்கு, வலிய வலியத் தருந்தருவாய் வழங் காண் டியப்ப மாமணியே. (௰)

சிறிது விசனமுற்றபோது சொல்லிய கவி.

கோபமொடுங் காதவிதங் கொண்டனையேல் யானுமனத்
தாபமொடுங் காதவழி தாண்டிடுவேன்—பாபமிணங்
காதமிசை பெற்றிடுநீ கண்டறிவாய் தாமதியேன்
நீதமிசை யாண்டியப்ப னே. (௧௧)

வேழஞ் சினந்தந்த வெங்கைதருந் தோலணிவர்
எழுஞ்சி னந்தந்த வேழினைத—ஆறுமுகக்
கொண்டியப்ப நாமலைமேர் தொல்புவிசீ ரோதினரை
ஆண்டியப்ப நாமலைமே ரா. (கஉ)

கதவுக்குங் கற்றானுக்குஞ் சிலேடை.

மிக்கதிறப் பாக்கலையு மேவி யடைக்கலுற் றுத்
தக்கநிலை யோடிருப்புச் சார்தலினால்—இக்கு
உதவுங் கருவென் றுரையாண்டி யப்ப
கதவுங்கற் றானுநிகர் காண். (கங)

என்றனக்கு மாதுலனீ யென்பதுபோல் நாயேனும்
உன்றனக்கு மாதுலனா யுற்றிருக்கும்—நன்றுமுறை
கொண்டிருந்தோ மாதலினீ கூர்ந்துவர யாசிக்கேன்
தண்டமிழ்க்கந் தப்பபுலி தா. (கச)

அகத்தியினி லொட்டை யகற்றினதி னோடு
சகத்திலொன் றற்றதுநேர் சாற்றம்—பகத்திநடு
இல்லாத முல்லைமிசை யின்னிளசை யாண்டியப்ப
வல்லாளா வந்தனைது வாய். (கரு)

திருநெல்வேலியிலிருந்து பாங்கிரிக்குச் செல்லும்போது
எழுதிய கவிகள்.

வானகத்தா ருஞ்சிகர வன்கயிலை போர்த்தவனைக்
கானகத்தா னைத்தசிவன் கண்ணுதித்த—மானவைவேற்

கந்தரநா லாம்பவனி கண்டுபணி யாண்டியப்ப
கந்தரநா லாம்பரவா கா. (௧௬)

சிலசங் கதிசுருக்கிச் செப்புவன்கே ளொன்றும்
நலசங் கதிவிருப்பி னார்க்கும்—பலநலஞ்செய்
யுந்திருப்ப ரங்கிரியா னேரிணுக்கிக் கார்த்திகைநாள்
வந்திருப்ப ரங்கமெனு மால். (௧௭)

மருமானை யேத்திமுக மாநகர்க்குச் செல்வேன்
வருமானை போலவுமே மார்பி—லிருவாரந்
தாக்கவந்த வாயுவெனச் சாற்றுமொரு பேர்படைத்த
சீக்கவந்த னக்குளிருந் தேன். (௧௮)

ஆனதிறு லீறுவரை யங்கிருந்தே னென்னினுநின்
மேனதிறு டிப்புனைவர் வேணியமர்—வானை
மதிப்பருவத் தின்வரைக்கும் வண்டமிழ்சொற் றேன்கார்
மதிப்பருவ மிக்கவரு வாய். (௧௯)

நின்கடிதங் கண்டுமிந்த நேரம்வரை யைந்தருவின்
னன்கடிதங் கம்பரனோர் நாட்டுநினக்—கன்பொடெழு
தாதிருந்த வம்பனுக்கோர் தாள்முகவூர்க் கியெனகந்
தேதிருந்த வாழுமர சே. (௨௰)

வெறிவிலக்கு வெண்பா.

காலைநடுக் கொண்டகலைக் காரிகையே கேளிரண்டு
கால்விட்ட தாமிமைக்குக் கண்டனமென்—காலைவிரி

யாக்குவளை நோக்கினளை யாண்டியப்ப பூபதிபா
லாக்குவளை நோக்கி னதை. (உக)

இதுவுமது.

அங்கசனு லஞ்சரிவை யாயினுமே வாடுவணீ
அங்கசனு லஞ்சரிவை யாயினுமே—எங்களனே
கம்பனைவா மெல்லுமன்றிக் காரிகையே யாண்டியப்ப
கம்பனைவா வென்றிடுமோ காண். (உஉ)

இதுவுமது.

சங்காரஞ் செய்வரம்பிற் றங்கிளசை மன்பகையைச்
சங்காரஞ் செய்வரம்பிற் சார்கிறத்தால்—இங்கிவளுக்
கென்பயனு மென்பயனு வேறலன்றி யாண்டியப்ப
மன்பயனு டப்புரியம் மா. (உங)

இதுவுமது.

தாண்டியமட் டும்பரிசூழ் தண்ணிளசைக் கண்கவிக்கு
வேண்டியமட் டும்பரிசில் மேவியருள்—ஆண்டியப்பன்
தோட்டங்கை வைத்திடவோ தூங்குயிலாட் கன்னைபுதுக்
காட்டை வெட்டி விட்டதிலென் காண். (உச)

ஷை கடை தலைப்பூட்டு.

இன்பங் கிடைக்குமனை யேயாண்டி யப்பமன்னற்
முன்பங் கிடைக்குவந்த துங்தெரிவாய்—பின்பலனுக்

கில்லாக் கமடமதி யேந்திழையே யாகார
மில்லாக் கமடமதி லென். (உரு)

நற்றாயிரங்கல்.

வல்விக்க லுப்புமுலை மாதுகொளச் சந்துசொலும்
செல்விக்க லுப்புமுலை வந்தீரும்—கல்விக்கி
ஆண்டியப்ப னுக்குவகை யாமவற்காங் கர்வமிலே
சாண்டியப்ப வப்புவிமீ தாம். (உசு)

தொனிப்பாடித் திரிகையெனச் சுழன்றுகய வரைத் துதித்துத் துயர்கொண் டார்க்கும், இனிப்பாடித் திரிவதிலை யெனப்பிரமா ணமுஞ்சொலுதற் கெனும்போ தென்முன், தனிப்பாடித் திரிகளைச்சேர்க் தவன்போல்வந் தனைமறக்கத் தந்தான் கூறச், சனிப்பாடித் திரிப்பால்முன் இலங்கை வென்ற வாண்டியப்ப தருவன் ஞேனே. (உஎ)

கருங்கனவி நிகருமுலை விழியர்புக ழாண்டியப்ப காமன் போல்மு, திருங்கனவி யாழனெனத் தேர்மதியு மாதயவுந் திருவும் வாணர்க், கொருங்கனவி டாய்தவிர வூட்டு மிரக் கமுமழகு முற்றி லாரை, வருங்கனவி லேனுநினைத் திடமாட்டே னினைக்கில்வரும் வாந்தி தானே. (உஅ)

சிவகாசியிலிருந்து பந்தற்கால் வேண்டுமென்று வரைந்தமைக்குப் பதில்வராமைபற்றி வதனபுரத்திலிருந்து எழுதிய கவி.

உலகாளும் வேந்தரெலாம் புகழிளசை யாண்டியப்ப வுசித ராஜ, திலகாநீ யனுப்புவதும் பலகாலே யானதிரு

சிறிய நாளும், பலகாலுங் கேட்டனுக்க வேண்டுமென நினை
த்திருந்த பண்போ வன்றி, இலகாநின் றிடவனுப்பி யென
க்கெழுத மறந்தனையோ வியம்பு வாயே. (உகூ)

என்கூட வளையுயிரா விசைந்ததென்ற ராவணனை
யெரித்த கற்புப், பொன்கூட வளைபுனைந்த புனிதனிக ராண்
டியப்பா புகழ்நின் வீட்டின், முன்கூட வளையின்மறந் திருந்த
குடை கொணர்ந்திலையேல் புனிந்து நின்பால், நன்கூட
வளையொடுபா லுண்டுபல மாவருவ னானுந் தானே. (௩௦)

திருநெல்வேலியிலிருந்து எழுதிய கவி.

பெரும்பார்க்கு வள்ளலெனும் பிரபலசே வளாண்டி
யப்பபிரபு தன்பாற், சுருப்பார்க்குங் குழற்கொடியே சுகித்து
நிதம் வாழ்ந்திருப்பாய் சுகமே கொள்வாய், கரும்பார்க்கு
மேயினிக்குங் கனகமுனைக் குந்தருவான் கனியே தன்னை,
விரும்பார்க்கு மிரங்கியருள் வேந்தவன்போற் கிடையாது
விளம்புங் காலே. (௩௧)

மடந்தையலங் காரியிவள் மனம்போல வொருதினமா
வதுநீ வந்து, நடந்தையலங் கூடுவதென் னுளினுமே புரிவை
யென்ன ஞாயங் கொங்கைக், குடந்தையல வாவுவடங் கோடி
பல ரெனத்தெரிக்குங் கோவே யிந்த, அடந்தையல ரிடத்
துவைக்க லாமாமுத் தமிழாண்டி யப்ப மாலே. (௩௨)

புகலவடங் காப்புகழைப் பெறுமினசை யாண்டியப்ப
பூமா னேன்றுப், பகலவடங் கைக்கனந்தம் பணங்கொடுத்துச்

சேர்ந்ததையும் பார்த்துக் கொஞ்சம், இகலவடங் கொண்டு வெறுத் தானிவன்மே லாசைகொண்டே யின்னுங் கொங்கைச், சகலவடங் களும்பொரிய மயங்குகிறா ளீதெனதி சயமின் னாரே. (௩௩)

வனசங்கங் கணக்கரமே நிகருமட மாதுநின்ப வனியைக் கண்டு,கனசங்கங் கணப்பொழுதிற் கழலவிட்டா ளதுக்கணைமார் காக்குங் கோவில், முனசங்கங் கணக்கின்றி யிழக்கவுஞ்செய் தார்பிறமா மோக மீறி, மனசங்கங் கணத்திரியா துணைந்தனள்வா வாண்டியப்ப வரிசை மாலே. (௩௪)

அரும்பாயா சந்தனதா புறப்பாய்ந்து மறுபுறம்போ யகன்றி னாட்குத், தரும்பாயா சந்தனமா பாயசமா வேறும் வெறுத் தருவு மன்றி, விரும்பாயா சந்தனமா வரவுமிலை யெனக்கதறி மெலிவ ளிற்றுத்,திரும்பாயா சந்தனமேற் சேராயா வாண்டியப்ப செயபூ மானே. (௩௫)

கனகவனப் பரியகுடங் களிநிகருங் கனமுலைதாங் காது மாமோ, கனகவனப் பரிகலங்கை கலந்தறியாள் மயல் மிகுத்துக் கலங்கு வாள்கோ, கனகவனப் பரிதூறுவ தனமலர்ச்சி யகமலர்ச்சி காணைச் சேர்வாய், கனகவனப் பரியவியு மிளசைநக ராண்டியப்ப கருணை மாலே. (௩௬)

விஞ்சாற்றுக் கவினிலங்கும் பரங்கிரியைத் தொழு மடியே மிடியென் றேது, நஞ்சாற்றுக் கவிசனங்கொ ளாதருள்செ யாண்டியப்ப நண்பா கன்னற், செஞ்சாற்றுக் கவிர

முதுக் கிணையாகுங் கழுகுமலைச் செவ்வேள் கோவைக்,
கெஞ்சாற்றுக் கவியனுப்பி னேமதனை யுனதுதந்தை யென்
போர் பாலும், (௩௭)

இருமருப்பு முலையருக்கு வெகுவிருப்ப முறமணக்கு
மினிய தேன, மருமருப்பு வெங்கணையெய் மாரனென வந்
துதித்து வணங்கா ரென்னும், வருமருப்பு வாரிதிக்கப் புற
முறச்செய் திளசைநகர் வாழுந் திவ்ய, தருமருப்பு னிதமணி
யாம் நமது செல்லச் சாமிவரோ தயவேள் பாலும். (௩௮)

காட்டியதிற் பிழைகளிருந் தாலுமுறத் திருத்திவிடக்
கனிவாச் சொல்வாய், நாட்டியமின் ஞரிலங்கு சிவகங்கைக்
கின்றுசென்று நாலு நாளில், ஈட்டியபொன் மலிமதுரை
யுற்றிடுவேன் பின்புவர வெழுது வேனற்,றூட்டிகவா னென்
னவிளங் கியபுகழாண் டியப்பசர சப்பூ மானே. (௩௯)

நீலக்கந் தரனருள்சே ராண்டியப்ப ரஞ்சிதமா னே
யன் றாதா, லேலக்கந் தரமழைத்தும் வந்திலன்றூர் தந்தி
லன்யா னென்செய் வேன்செவ், வேலக்கந் தரளமென வே
பொழியப் பொழியாது மின்னு ரேவி, சாலக்கந் தரதியினந்
தாங்காளென் றுருமொழிபோய்ச் சாற்று வீரே. (௪௦)

கருப்பஞ்சா றுங்கசந்து குமட்டியிடு மரிவைமுனங்
காமப் பாவி, அருப்பஞ்சா றுங்கரங்கொண் டெய்யவந்தான்

றுய்யதிரி பாகும் பாட்டில், விருப்பஞ்சா றுங்கவெங்க
ளாண்டியப்பா நீவரவே வேண்டுங் காலு, மருப்பஞ்சா றுங்
கனமுள் வேளையுமி ராவதனால் வரமாட் டாளே. (௪௧)

பூச்சுமைதா னத்தனையுங் கொண்டடக் குறிக்கனி
யெப் போதுங் கொண்டாள், ஏச்சுமைதா னந்தருமம் புரி
நகருமோநகரு மெழுமே காம, மூச்சுமைதா னத்தெருவி
லேகிடந்தான் வருவனென மொழிகு வாயோர்,பேசுமைதா
னத்தருநே ருங்கரங்கொள் ஆண்டியப்ப பெருமைக் கோவே.

அரசுவசந் தானமருங் கிள்ளையெனப் பேசுமென
தருமைப் பெண்ணுக், கரசுவசந் தானமட வாருமிலே வே
ளும்விடுத் தகலா னன்றிப். பரசுவசந் தானயமாப் பாடிவிளை
யாடிரசம் பணவும் வெள்கிப், பரசுவசந் தானதரு வாண்டி
யப்பன் பாலுமுருள் பாவை தானே. (௪௩)

சங்காகங் காரிணமா வெனுங்களக்குந் தளவளமைச்
சந்தக்காரிக்,கிங்காகங் காமனம்பா லேதமரா யினதுதொடை
யிந்து சேர்நித், தங்காகங் காகாவென் றேகதறி யுண்ண
வொன்னார் தசையை யூட்டும், துங்காகங் காகுலசே கரவ
துலா வாண்டியப்ப சுகிர்த வானே. (௪௪)

பதம்படிய மாதருடன் பரதமியற் றென்னின்மதப்
பாவியானற்,பதம்படிய மாநொடியிற் பாயுமினிப் பாயுமிலேப்
பழமென் பாள்பற், பதம்படிய மாவாசை மூன்றுமெடுத்

துண்டுநிலைப் பறச்செய் தைவர், பதம்பாடிய மாவிரமஞ் செய்
தவனை யாண்டியப்பா பாவிப் பாயே. (௩௬)

கட்டினமத் தனைப்பொருளே வேளவிரித்தா வாரிமுனங்
கடையப் பாம்பார், கட்டினமத் தனையமுலை யரைப்புணை
ராண டியப்பாராம் கடறுலேப, கட்டினமத் தனையவிடு கிட்
டியென வட்டிவரக் கண்டேடை மைந்தின், கட்டினமத் தனை
குறுகுந் தோளைகந்தா யேன்மிகச்சங் கடங்கொள் ளோமே.

கண்டங் கண்ட முடியாத கனிவா சகத்திக் கருணை
வைபீக், கண்டங் கண்ட மாமதியின் கவினைக் காயன் பணி
றிலுனைக், கண்டங் கண்ட போலெனவை காரி புமிழ்வான்
பகைவர்கனைக், கண்டங் கண்ட மாக்கிடுமென் கணவாண்
டியப்ப மாமணியே. (௩௭)

எழுந்தப் புணரி முழுக்குமத னேவிற் கலங்கி விழிப்
புனற, வழுந்தப் புணரி துரியமே வருந்தா தாவெரன் றேமடு
வில், விழுந்தப் புணரி யெனப்படுதங்கு மின்றைட் கின்றுட்
கனிந்துபுலே, யழுந்தப் புணரி னியகவினை யணியாண் டியப்ப
மாமணியே. (௩௮)

இதுமா கருமா லெனவிதுவைக் கிரங்கி யுறங்கி டாது
நினைப், புதுமா கருமா னிடவடிவம் பொருந்திற் றெனவே
கொடுத்திடுகைப், பதுமா கருமா வென்னைவெறுப் பதுமா

தருணை யென்பளணை, பொருமா தருமா லைபொருந்தப் புணராண் டியப்ப மாமணியே. (௪௯)

கொடுக்குந் சாரதி யாகருங் காவனு கூல வாண்டியப் பேந்த்ரா விஜயனை, அடுக்குந் சாரதி யாமுனைக் கண்டுமா லாகி நாடுவள் வாடுவள் பன்னகக், கடுக்குஞ் சாரதி கோவா வெனுமிடைக் கன்னி பானுவந் தின்றுதன் கைமிசை, உடுக் குஞ் சாரதி காரிதெவ் வோது நா னுள்ள வித்தை யனைத்தும் புரிவையே. (௫0)

பெருவி ருந்தைய ருந்தனல் போலுங்கு பேரன் வாட்டநன் காமனை நீங்கியே, தெருவி ருந்தைய னேபர னேயெனத் தேங்கியேங்கிப் புலம்பிவைந் தன்னைகாள், வருவி ருந்தைய ருங்களை முன்னமிவ் வாறு கண்டிருந் தா ரோவென் றோர்வள்சூழ்,தருவி ருந்தையவா வொடு பேவினை சைக்கு ளாண்டியப் பேந்த்ரசீ சேர்வையே. (௫௧)

மோகப் பாவிக்கு நானென்ன செய்குவேன் முற்று மேவினை யேவினன் சர்க்கரைப, பாகப் பாவிக்கு மேயென்று வாடுமிப் பாவை மேனுன்ன வாவைச் செலுத்துவாய்,மாகப் பாவிக்கும் பூகத்தின் மேல்வளர் வண்மை சூழிள சைத்துரை மார்கள்கண்,ணுகப் பாவிக்கு மந்திரி தந்திரி யான வாண்டியப் பேந்திர சிங்கமே. (௫௨)

எந்த வித்தை யனைத்துந் தெரிந்துரை யெங்கள் ஆண் டியப் பேந்திரன் பானிதபுந்த வித்தை யனைநினைத் தேடிகு

மோகமீறி விவாகமுமின்றிய, சந்த வித்தை யணைவொடு
மேவினாள் சாமி நீயினிக் காமத் தழலினை, வந்த வித்தை
யணையரு வந்திட வாழ்வி யென்றுரைப் பாய்பசுங் கிள்ளையே.

நித்த ராசனு மாரிசி யாமயல் நீங்கி ஞர்பர டும்முழந்
தாளும்வன், னத்த ராசனு மன்பகை யாங்கனி நங்கைக்
கெங்ஙனம் போமனே யேவெகு, சுத்த ராசனு மானங்கண்
டோமெனச் சொல்வ தென்னவர்க் கின்றோ விளசையு,நித்த
ராசனு மெச்சாண்டி யப்பனைச் சேர்வை நீயுங்கண் டாவிது
திண்ணமே. (௫௪)

பந்தங் கொண்டலை மேவப் பயந்திடும் பார மாமுலைக்
கன்னிமை நீபல, வந்தங் கொண்டலை நேர்பகம் வீங்கவோ
வாறுசேரக் கருக்கொண்ட தென்றெனு,தந்தங் கொண்டலை
மேலடித் தாளிதற் கைய மில்லைவந் தேமணஞ் செய்கொ
டைச், சந்தங் கொண்டலை பொக்கக் கவிக்கருள் சாமி யாண்
டியப் பேந்திர பூமனே. (௫௫)

புல்ல வாதுவ ராமித மாயெனப் போந்து மாரனுங்
கெஞ்சுவ தன்றிமுன், வெல்ல வாதுவ ராதுநிற் பானந்த
வேளை தான்வசந் தாபர சென்னவுண், டல்ல வாதுவ ராகம
தையுரைத் தானு மஞ்சலி செய்வனிக் கன்னியை, வல்ல
வாதுவ ராபுரி காத்தவா வள்ள லாண்டியப் பாவந்து
சேர்வையே. (௫௬)

நேத்தி ரங்கனைக் கண்டிகழ் நீலமே நேரு மாதர்கள் சூழிள சைக்கனொன், ஞாத்தி ரங்கனைக் கண்டினி தாய்த்தரு மன்னை லாண்டியப் பேந்திர நீயருள், பூத்தி ரங்கனைக் கண்டின கள்ளனூர் புத்தி ரன்பொரப் பெற்றவன் பிள்ளைசற், பதூத்தி ரங்கனைக் கண்டினை கேரிசை பாடு வாள்நட மாடுவள் கூடவே. (௫௭)

வாதி யானனங் காமனு மேபொர வந்த நாள்முத லுன்றிரு நாமமே, மாதி யானநங் கைக்கிது பொய்யல மாதியாகந்த ருந்துரை யேபொரு, தூதி யானனந் தஞ்சொல்லு வேனென்று தோன்றி டாதனே யேற்றனே வாய்தசப், பாதி யானனம் பெற்றவர்க் கன்புசெய் பால வாண்டியப் பேந்திர சிங்கமே. (௫௮)

தருவாயி தாகரவா ரிதியாகு முன்சமுகந் தனிலெண்ணுளாம், ஒருவாயி தாவுரைத்துச் சென்றபடி வந்திலனை யுருத்து நீபோய், வருவாயி தாவெனவே சினப்புரியேல் நானுமரு மகவா மைய்யா,குருவாயி தாதையிவர் தேவெனக்கொ ளாண்டியப்ப குணபூ மானே. (௫௯)

சந்தக்கந் தப்பாவின் றமுனரென் மணியேயென் சாமியேயென்,சொந்தக்கந் தப்பாவென் றெவர்களுஞ்சொல் லாண்டியப்பசமுகற் காப்பாய்,இந்தக்கந் தப்பாமலேற்றசிவு

னெடும்பரங்குன் றிருந்தோய் தூளாய்ச்,சிந்தக்கந் தப்பாதத்
தெற்றுயிப முலைக்குறமான் சேருந் தோளே, (௬0)

அரும்புலவா விச்சுமந்த பேழையும்பா டித்திரியா தழை
த்தே யன்பாய்ப்,பெரும்புலவா னமைப்பாடென் றிருந்தியுந்
தந்ததன்றிப் பிரிய மாயா,வரும்புலவா வென்றழைக்கு மடந்
தையர்வே ளாண்டிப்ப மாறன் முன்னோன், விரும்புலவாக்
கிழிதரும துரைக்கழைத்தென் றனக்குமகிழ் மிகச்செய்
தானே, (௬௧)

திலகநியா யத்துரைமா ரசுபுரி யிளசையெனுஞ் செழு
நல் லூருக், கிலகநியா சத்தொடையான் மந்திரிபோல் வந்து
தித்தெவ் வியலுந் தேர்ந்து, வலகநியா னவரைமயக் காண்டி
யப்ப பூமனைய மானீ யென்னப், பலகநியார் வத்தொடுபெற்
றுதவியெனக் கின்பரசம் பாலித் தானே. (௬௨)

நம்பரத்தை யரைக்கணையா லெய்தவனாற் சோர்கொ
டிக்கிந் நாட்டாய் மாரே, வம்பரத்தை யரைக்கவழித் திடக்
கரைக்க நினைப்பர்பல வாறு நித்த, மும்பரத்தை யரைக்
கணைக்கி லாதுபுணர்ந் திதைவெறுத்தல் முறையோ சேர்
பொன், னம்பரத்தை யரைக்கணியாக் கவிஞர்களுக் கரு
ளாண்டி யப்ப மாலே. (௬௩)

கரையுங் கடலா லலையுமளக் கரையு முரச மாக்குமனங், கரைப்பு நிகராய்த் திகழுநருங் கரையு நெருக்கி யணைகுவன் ஏர்க்; கரையுங் கனியுஞ் சினியுமே கரையும் படிமேதாக் திர மென்முரு, கரையும் பரையும் பகிர்ந்திடுமே கரையும் புரியுங் குமிழ் மாரன்; வரையுங் கொடையாய்க் கொண்டுமிசை வரை யுந் திருவா யுதியுமை, வரையும் புரந்தா வருமாத வரையு நிகராண்டி ப்பனுமே; வரையு மயக்கு மெழுத்தாணி வரையும் படிதந் தனைனிளித்து, வரையுஞ் சலியா தெழுகோடி வரையுங் கனிக ளொழுகுவனே. (கச)

## தனிக்கவிகள்

முற்றிற்று.